**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2025.10.31 |

# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2025 ஒத்தோபரில் எதிர்பார்க்கப்பட்டவாறு இலக்கினை நோக்கி மேலும் அதிகரித்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (கொநுவிசு, 2021=100)[1] அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு), 2025 ஒத்தோபரில் மேலும் அதிகரித்து, பணவீக்க இலக்கினை நோக்கி தொடர்ந்தும் முன்னேற்றமடைவதைக் காண்பிக்கின்றது. அதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது இலங்கை மத்திய வங்கியின் அண்மைய கால எறிவுகளுக்கு இசைவாக, (ஆண்டிற்கு ஆண்டு) 2025 செத்தெம்பரின் 1.5 சதவீதத்திலிருந்து 2025 ஒத்தோபரில் 2.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் கொநுவிசு (2021=100) | 2025 செத்தெம்பர் | 2025 ஒத்தோபர் |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 193.7 | 193.8 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.2 | 0.1 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 1.5 | 2.1 |

உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 செத்தெம்பரில் பதிவாகிய 2.9 சதவீதத்திலிருந்து 2025 ஒத்தோபரில் 3.5 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்த அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2025 செத்தெம்பரில் பதிவாகிய 0.7 சதவீதத்திலிருந்து 2025 ஒத்தோபரில் 1.4 சதவீதமாக அதிகரித்தது.

**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (2021=100)**




மாதத்திற்கு மாதம் அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2025 ஒத்தோபரில் 0.07 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. இதற்கு, உணவு வகைகள் -0.13 சதவீதப் புள்ளிகளினால் பங்களித்ததுடன் உணவல்லா வகை 0.10 சதவீதப் புள்ளிகளால் பங்களித்தது.

அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 செத்தெம்பரின் 2.0 சதவீதத்திலிருந்து 2025 ஒத்தோபரில் 2.2 சதவீதத்திற்கு படிப்படியாக அதிகரித்தது.

எதிர்வரும் காலப்பகுதியில், பொருத்தமான கொள்கைகளின் ஆதரவுடன் பணவீக்கத்தின் படிப்படியான அதிகரிப்பு 5 சதவீதம் கொண்ட இலக்கினை நோக்கி நகரும் எனப் பிந்திய எறிவுகள் காண்பிக்கின்றன.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[அ]**

**கொநுவிசு[ஆ], காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %**

**2025 செத்தெம்பர் நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது**




அ/ வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட எறிவுகள் 2025 செத்தெம்பரில் எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், ஊகங்கள் மற்றும் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இங்கு காணப்பிக்கப்பட்ட வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது.

ஆ/ வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் சகல கிடைக்கப்பெறுகின்ற தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

§ *2023 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

***மூலம்:*** மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (கொநுவிசு, 2021=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (2021=100)**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)**

| காலம் | | சுட்டெண் எண்ணிக்கை | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டிற்கான சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2024 | ஒத்தோபர் | 189.9 | 177.5 | -0.5 | -0.1 | -0.8 | 3.0 | 2.2 | 2.9 |
| | நவெம்பர் | 189.4 | 177.1 | -0.3 | -0.2 | -2.1 | 2.7 | 1.7 | 3.1 |
| | திசெம்பர் | 191.7 | 177.1 | 1.2 | 0.0 | -1.7 | 2.7 | 1.2 | 3.3 |
| 2025 | சனவரி | 192.6 | 178.4 | 0.5 | 0.7 | -4.0 | 1.2 | 0.4 | 3.2 |
| | பெப்புருவரி | 192.2 | 178.5 | -0.2 | 0.1 | -4.2 | 0.7 | -0.5 | 3.0 |
| | மாச்சு | 191.6 | 178.6 | -0.3 | 0.1 | -2.6 | 0.7 | -0.8 | 2.8 |
| | ஏப்பிறல் | 191.2 | 178.8 | -0.2 | 0.1 | -2.0 | 0.8 | -1.1 | 2.6 |
| | மே | 192.8 | 179.2 | 0.8 | 0.2 | -0.7 | 1.2 | -1.2 | 2.4 |
| | யூன் | 194.5 | 180.1 | 0.9 | 0.5 | -0.6 | 1.5 | -1.4 | 2.1 |
| | யூலை | 194.1 | 180.8 | -0.2 | 0.4 | -0.3 | 1.6 | -1.6 | 1.9 |
| | ஓகத்து | 193.3 | 180.9 | -0.4 | 0.1 | 1.2 | 2.0 | -1.5 | 1.8 |
| | செத்தெம்பர் | 193.7 | 181.2 | 0.2 | 0.2 | 1.5 | 2.0 | -1.4 | 1.7 |
| | ஒத்தோபர் | 193.8 | 181.4 | 0.1 | 0.1 | 2.1 | 2.2 | -1.2 | 1.6 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

குறிப்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கமைவாக, ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கமும் மாதாந்த மாற்றமும் முழுத்தானமாக்கப்பட்ட சுட்டெண் இலக்கங்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டன.